REGD. NO. M. 6511 ★ தனி;இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 6உ வியாழன் (18—4—57) ★ வெளியூர்: சித்திரை 7உ வெள்ளி (19—4—57) [இதழ் 266

வாள் வளைந்தால் வீரன் சளைத்து விடுவானா?

மழுங்கிய முனையை கூரேற்றிக் கொள்ள மக்களிடம் செல்வோம்

கழகம் பலப்படுவதுதான் சாணைக் கல்லாகும்

சட்டசபையில் நிம்மதியுடன் பணியாற்ற வழிவகுப்பீர்

கழகத்திற்குப் புதிய வலிவும்--பொலிவும் கிடைக்க முயற்சிப்பீர்

குளித்தலைக் கூட்டத்தில் அண்ணா கனிவுரை

"வீரன் ஒருவன், மற்றொரு பிரம்மாண்டமான வீரனோடு வாள் பிடித்துச் சண்டையிடும்போது வாள் வளைந்தால், அதனால் சளைத்துவிட மாட்டான்; வேறு வாள் தேடி, ஓடிப் பெறுவான்; தொடர்ந்து சண்டையிடுவான். வளைந்த வாளை நிமிர்த்துக் கூரேற்றித் தொடர்ந்து சண்டையிடுவான்.

"அதுபோல நாங்கள், கூரேற்றிக் கொள்ள, மக்களின் நல்லெண்ணம் என்ற சாணைக் கல்லைத்தான் தேடிவருவோம்.

"இப்போது மக்கள், கழகத்திடம் காட்டும் நல்லெண்ணம் தொடர்ந்து இருந்தாக வேண்டும். கழகத்தவர் சட்டசபைக்குள் குறைவான எண்ணிக்கையினராக இருந்தபோதிலும், கழகம் சட்டசபைக்கு வெளியில் இன்னும் பலமானதாகக் கட்டி வளர்க்கப்பட வேண்டும். கழகம் பலப்படுவதுதான் 'சாணைக் கல்' கிடைப்பதற்குச் சமம்.

"கழகம் வெளியில் பலமிக்கதாக இருந்தால்தான் சட்டசபைக்குள் நிம்மதியாக நாங்கள் பணியாற்ற முடியும். வெளியில் கழகம் வலிவிழந்துவிட்டால் சட்டசபையில் 15 பேர் இருப்பதனால் பயன் ஏதும் இராது. மாறாகக் கழகம், வெளியில் மேன்மேலும் பலத்தோடு ஓங்கி வளருமானால், சட்டசபையில் எங்களுக்குப் புதிய வலிவும் அந்தஸ்தும் கிடைக்கும்.

"குளித்தலைக்குக் காமராசர் வந்து பார்க்கும்போது, 'கழகம் இல்லாத சிற்றூரே இல்லை—கழகக கொள்கைகளை அறியாத நல்லவர்களே கிடையாது—கழகக் கொடி பறக்காத மரமே இல்லை' —என்ற நிலையிருந்தால் சட்டசபையில் உட்கார்ந்திருக்கும் கருணாநிதியை அவர் பார்க்கும் விதமே வேறாகத்தான் இருக்கும். மாறாக இங்கே, கழகம் பட்டுப்போய்—கேட்பாரற்றுப்போய்க் கிடந்தால் சட்டசபையில் காமராசர் கருணாநிதியை ஏளனத்தோடுதான் பார்ப்பார்.

"எனவே, வெளியில் கழகம் தழைத்து ஓங்கி வளர்ந்து சிறப்பாகப் பணிபுரிவதில்தான் சட்டசபைக்குள் நாங்கள் பெறும் மதிப்பும் கௌரவமும் இருக்கிறது. காங்கிரசார் 150 பேராக இருந்தாலும் நாங்கள் 15 பேராக இருந்தாலும் எங்களுக்கு உரிய மரியாதை கிடைக்கும்"

—என்று அண்ணா அவர்கள் கடந்த 14—4—57 அன்று குளித்தலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

பணக்காரப் பெண்

"மகனுக்குப் பணக்கார விட்டுப் பெண் பார்த்துவிட்டால்மட்டும் போதுமா?

"பெண்ணைப் பெற்றவர் வீட்டுக்கு அவன் செல்லுகையில், கைவிரல்களில் இரண்டு மோதிரம், மணிக்கட்டில் ஒரு கடிகாரம், இடுப்பில் ஒரு சரிகை வேஷ்டி, தோளில் ஒரு அங்கவஸ்திரம்—என்ற நிலையில் அவனை அனுப்பினால்தான், அங்கே மாமியார் மருமகனை மதிப்பார். பணக்கார மாமியார் வீட்டுக்குச் செல்லும் அந்த மருமகனைப் போலன்றி, அணியும் ஆபரணமும் இன்றி செல்பவனை, இவ்வளவுதானா?' என்ற ஏளனத்துடன்தான் மாமியார் பார்ப்பார்.

"அதுபோல, எங்களைத் தேர்ந்தெடுத்ததுடன் மக்களது கடமை முடிந்துவிடவில்லை. வெளியில் கழகத்திற்கு புதிய வலிவும் பெருமையும் தேடித் தருவதில்தான் எங்களின் சட்டசபை பணி இருக்கமுடியும்; எங்களுக்கு உள்ளே மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

வார்த்தைக்கு வார்த்தை!

"சட்டசபையில் நாங்கள், வார்த்தைக்கு வார்த்தை பேசி விடுவது என்பது சுலபம்.

"பாரதம் படித்தவர்கள் தானே நீங்கள்? கௌரவர் நூறு பேர் இருந்தனர்—பாண்டவர் ஐவர்தான் இருந்தனர்; என்றாலும் வெற்றி......?

"கௌரவர்களே, நினைவிருக்கட்டும்!'—என்று, 15 பேர்களான நாங்கள் காங்கிரசாரைப் பார்த்துக் கேட்க முடியும்; அதை அல்ல நான் விரும்புவது!

"எண்ணிக்கையில் நாங்கள் குறைவாக இருந்தபோதிலும், மக்களின் ஊழியர்களாகச் சிறப்பான பணிபுரிய, மக்கள், எங்களுக்குத் தொடர்ந்து பலம் தந்து கொண்டிருக்க வேண்டும்.

"கழகம் இல்லாத பட்டி தொட்டி இல்லை; கொடி பறக்காத சிற்றூர் இல்லை என்ற நிலை நாடு முழுதும் தோன்றியாக வேண்டும்.

'தோட்டா' இல்லாத துப்பாக்கியால் பயனுண்டா?

"பட்டாளம் வைத்திருக்கிற மன்னன், அறிவுடையவனானால், அவன், சண்டையின்போது அந்தப் பட்டாளத்தை மட்டும் நம்பியிருந்துவிடல் கூடாது; அந்தப் பட்டாளத்திற்குத் தேவையான படைக்கலன்களை இடையறாது உற்பத்தி செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். தோட்டா இல்லாத துப்பாக்கியால் பயன் இல்லை; துப்பாக்கி இல்லாத வீரனும் போரிட முடியாது.

"அதுபோல நீங்கள், எங்களுக்குத் தொடர்ந்து, நல்லாதரவு என்ற பலம் தந்து கொண்டிருந்தால்தான், நாங்கள் சட்டசபையில் சிறப்பாகப் பணிபுரிய முடியும்.

"மக்களின் நல்ல எண்ணம், கழகத்தின்பால் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தால், கழகத்தின் வீரமுழக்கம் நாடெங்கிலும் எட்டுத் திக்கிலும் கேட்டுக்கொண்டிருந்தால், இப்போது கழகம் சட்டசபையில் பெற்றுள்ள இடம், தமிழகம் உலகத்தில் பெறவேண்டிய சிறப்பான இடத்தைப் பெறுவதற்குச் செய்யப்படும் முதன் முயற்சி என்பதில் சந்தேகமே இருக்க முடியாது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

குந்தகம் விளையுமானால்..!

மக்களி[illegible]ம் புதிய பலம் தேடிச் செல்வோம்

"நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்றுள்ள தி. மு. கழகம், அவர்களது நல்ல மதிப்பையும் நம்பிக்கையையும் பெறுவதற்கு, நடைபெற்ற தேர்தல் ஒரு அரிய வாய்ப்பாக இருந்தது. நாட்டு மக்கள், 'இவர்கள் காரிய மாற்றுவார்கள்' என்று நம் மீது நம்பிக்கை வைத்துத்தான் வாக்களித்திருக்கிறார்கள்.

"மக்களின் நல்லெண்ணம்தான், நமக்கு நெஞ்சுறுதி கிடைக்கும் வழியாகும்.

"நாங்கள் எண்ணிக்கையில் குறைவானாலும், மக்கள், எங்களை உற்சாகப்படுத்தி, தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதற்கு உரிமை உடையவர்கள்.

புதிய பலம் தேடி வருவோம்!

"எண்ணிக்கையில் நாம் குறைந்திருக்கிறோம் என்ற காரணத்திற்காக, ஆனால் கட்சியினரிடமிருந்து குந்தகம் வருமானால், நாம் மக்களிடம்தான் புதிய பலம் தேடி வருவோம்.

—குளித்தலைக் கூட்டத்தில் அண்ணா

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மத்திய அமைச்சரவை பதவி ஏற்ற வைபவம்

ஏப். 20-ல் முதல் கூட்டம்

புதுடில்லி, ஏப். 17—

இன்று மாலை இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகையில், இராசேந்திரர் முன்னிலையில், நேருவின் தலைமையில் அமைந்துள்ள புதிய மந்திரி சபை (உதவி மந்திரி திருமதி வயலெட் ஆல்வா உட்பட) பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டது.

பிரதம மந்திரி உட்பட சில புதிய மந்திரிகள் இந்தியிலும், மற்றவர்கள் ஆங்கிலத்திலும் பதவிப் பிரமாணம் செய்தனர். இந்த வைபவம் முடிவதற்கு 1¼ மணி நேரம் ஆயிற்று.

புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் ஏப். 20-ந் தேதி நடைபெறுமென்று தெரிகிறது.

தமிழகத்தின் பழமையானதோர் நாகரிகத்திற்கு ஏற்பட்டுள்ள இழிவைத் துடைக்க...!

நாடெங்கும் கழகப் பாசறைகள் தோன்றிக் கொண்டே இருக்க வேண்டும்

பாசறையில் பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை பெருகப் பாடுபடுவீர்

"தமிழர்களான நாம், மிகப் பழமையானதோர் நாகரீகத்திற்குச் சொந்தக்காரர்கள்!

"உலகின்றுன், தலைசிறந்த நாடு என்ற பெயரைப் பெற்றிருந்த பண்டைத் தமிழகத்தின் இன்றைய வாரிசுகள்!

"தமிழகத்தின் அந்தப் பெருமைக்குரிய நாகரீகத்தை, நாம் காப்பாற்றியாக வேண்டும்!

"தமிழகத்தின் போற்றுதலுக்குரிய வரலாற்றிற்கு ஏற்பட்டுள்ள இழிவைத் துடைத்தாக வேண்டும்! தாயகத்திற்கு விடுதலைப் பெற்றாக வேண்டும்!

"இந்த விடுதலையைப் பெற சட்டசபைக்குப் 15 பேர்களை அனுப்பி வைத்திருப்பது போதுமானதல்ல!

"நாடெங்கிலும் விடுதலைக்கான கழகப் பாசறைகள் தோன்றிக் கொண்டே இருக்க வேண்டும்! பாசறையில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை பல்கிப் பெருகிக்கொண்டே இருக்கவேண்டும்! விடுதலைப் படை தொடர்ச்சியாக உண்டாகிக்கொண்டே இருக்க வேண்டும்!

"நாட்டை மீட்க வேண்டுமானால் கழகம், குளமாக இருக்கக் கூடாது; வற்றாத நீர் ஊற்றாக இருக்க வேண்டும்."

—அண்ணா

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—4—57 வியாழன்

தேபர் கூறாதது!

தேர்தல் முடிந்தபிறகு ஒவ்வொரு அரசியல் கட்சியும், தனது தேர்தல் வெற்றித் தோல்விகளைக் குறித்து ஆராய்ந்தும், தாம் பெற்ற வெற்றிக்குத் தெளிவான விளக்கம் தராது விடுத்தும், கிடைத்தத் தோல்விகளுக்கு தங்கள் ஆய்வில் பட்ட காரணங்களைத் தந்தும், தேர்தல் காலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றன. பொதுத் தேர்தலில் நேரடியாகக் கலந்து கொள்ளுவதற்கான வாய்ப்பும் வசதியும் தேவையும் இல்லாதோரும்கூட, தம் விருப்பு வெறுப்பை ஆராய்ந்து பெற்ற முடிவெனப் பிறருக்கு அறிவிப்பதின் மூலம், தாங்களும் பொதுவாழ்வில் இருந்துவருவராகத் தங்கள் நெஞ்சுக்கு உறுதிப்பாடு செய்துவிட்டு, தேர்தலுக்கு முடிவுகட்டியுள்ளனர்.

தேர்தலில் தமது கட்சி பெற்ற வெற்றித் தோல்விகள் குறித்து ஆராய்ச்சி செய்துள்ள காங்கிரசு தலைவர் தேபர், தமது கட்சியின் இன்றைய நிலை குறித்து, மிக மிகத் தெளிவாகக்குறிப்பிட்டுள்ளார். காங்கிரசு கட்சியின் அன்றைய பணி குறித்தும், அப்பணி மூலம் அக்கட்சி பெற்றிருந்த தனிச்சிறப்பு குறித்தும், சுதந்திரத்திற்குப்பின் அக்கட்சி அடைந்துள்ள நிலை குறித்தும் தெள்ளத் தெளிய அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

'சுவையான வாழ்வையும் பதவிப் பித்தையும் துச்சமாகக் கொள்ளாத கட்சி எதுவானாலும், அது தனது இறுதியான அழிவைத் தழுவியே தீரும்' என்று அவர் எடுத்துக் காட்டியுள்ளார். 'சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து காங்கிரசுக்கு ஏதோ ஏற்பட்டுவிட்டது' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 'காங்கிரசுக் கட்சி தனது பொறுப்பைத் தட்டிக்கழித்து வருகிறது என்ற எண்ணம் தெளிவாகப் புலனாகாதவகையில் மக்களிடம் புகுந்துவிட்டது' என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அந்த அளவுடன் இருந்துவிடாது, 'ஏராளமான பதவிப் பித்தர்கள் காங்கிரசுக் கட்சிக்குள் கூடிவிட்டார்கள்' என்றும் அவர் குறிப்பிடுவதின் மூலம், காங்கிரசுக் கட்சியின் இன்றைய நிலையைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

அவ்வாறு பெருந் திரளாகக் காங்கிரசுக் கட்சியில் கூடியுள்ள பதவிப் பித்தர்களின், பதவிப் பித்தின் தரத்தையும் தன்மையையும் மதிப்பிட்டுக் கூறும் வகையில், 'கட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பே, தங்களுக்கும் அமைச்சர் பதவி வேண்டும் என சட்டசபை உறுப்பினர்கள் துளைக்கத் தொடங்கிவிட்டனர்' என்று குறிப்பிட்டுள்ளார். காங்கிரசுக் கட்சியின் எதிர்காலம் எப்படி இருக்கக்கூடும் என்பதை படம்பிடித்துக் காட்டுவதுபோல், 'அடுத்த இரண்டாண்டுக் காலம் காங்கிரசுக்கு நெருக்கடியான காலமாகும்' எனப் பண்டிதர் குறிப்பிட்டுள்ளதை எடுத்து இயம்பி உள்ளார்.

காங்கிரசின் இன்றைய நிலை குறித்து இவ்வளவு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் பிணியாளனின் பிணிநிலை கண்டறிந்து கூறும் மருத்துவர்போல், தேபர் கூறியுள்ளார். ஆனால், இத்தகு அறிகுறிகளை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சியைப் பற்றியுள்ள மூல நோயைக் கூறத் தவறிவிட்டிருக்கிறார் தேபர். அறிந்து செய்தாரோ அல்லது அறியாமல் செய்தாரோ அத்தவறை.

பதவிப் பித்தர்கள் காங்கிரசுக் கட்சியில் ஏராளமாகக் கூடிவிட்டனர் எனக் குறைப்பட்டுக் கொள்ளும் அவர், அத்தகைய பதவிப் பித்தர்கள் காங்கிரசுக்குள் எப்படி நுழையமுடிந்தது? தாமாக நுழைந்தார்களா? அல்லது அழைப்பின்மீது நுழைந்தார்களா? என்பது குறித்தும் அவர் விளக்கம் தந்திருக்க வேண்டும்.

அதுவுமன்றி, அவர் குறிப்பிடுவதுபோல் பதவிப் பித்தம் தலைக்கேறி இருப்பவர்கள் என்ற பட்டியலில், புதிதாகக் காங்கிரசில் புகுந்தவர்கள் சதமானம் எவ்வளவு? பழமையானவர்களின் சதமானம் எவ்வளவு? என்பதையும் அவர் தெளிவுபடுத்தி இருக்க வேண்டும். நிற்க,

கட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குள்ளாகவே அமைச்சர் பதவி கோரி காங்கிரசு சட்டசபை உறுப்பினர்கள் ஆலாய்ப்பறந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளாரே அல்லாது, அந்தத் தலைவர் பதவியில் உள்ளடங்கியுள்ள முதலமைச்சர் பதவிக்காக கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு உள்ளுக்குள்ளாகப் போரிட்டுக்கொண்ட காங்கிரசு பழந் தியாகிகள் குறித்து அவர் ஒன்றும் கூறாது விட்டுவிட்டார். அத்துடன், சட்டசபை உறுப்பினர் என்ற நிலையைப் பெற்றால் தான் அமைச்சர் பதவியை அடைய முடியும் என்ற எண்ணத்தில், சட்டசபை உறுப்பினர் அந்தஸ்தைஅடைவதற்கே, அவர்கள் தேர்தலில் எவ்வாறு முறையற்ற முறைகளைக் கையாண்டு இருப்பர் என்பதையும் அவர் எண்ணிப்பார்ப்பதுடன், வெளிப்படையாக விளம்பியும் இருக்க வேண்டும். ஆனால், அதை அவர் கூறவில்லை.

காங்கிரசுக் கட்சியின் பெயரால் தேர்தலில் கலந்துகொள்ள எவ்வளவு பேர் புதிதாகக் காங்கிரசுக் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களில் பதவி ஆசைகாட்டிச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர் விகிதாச்சாரம் என்ன? குறிக்கோள் தெளிவுகூறிச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் விகிதாச்சாரம் என்ன? என்ற உண்மையை அவர் எடுத்துக்காட்டாது இருந்துவிட்டார்.

பதவிப் பித்துத் தலைக்கேறித் தவியாகத் தவித்துக் கொண்டிருக்கும் பணத் திமிங்கலங்களை சல்லடைப் போட்டுத் தேடிப் பிடித்து, அவர்களுக்குப் புத்தம் புதிய கதராடைப் போர்த்திப் புனித நீராட்டி, காங்கிரசு கட்சியில் குடியேற்றிக் கொண்டு பதவி வெறியர்கள் கூடாரமாகி விட்டது காங்கிரசுக் கட்சி என இப்பொழுது தேபர் கூறுவது, அரசியல் விந்தைக்கெல்லாம் தனிப்பெரும் விந்தையாகும்.

இந்த உண்மையை அவர் கூறி இருக்க வேண்டும். ஆனால், அவரே கூறாது விட்டுவிட்டிருக்கிறார்.

வரவேற்பு இதழ்கள் பெறுவோர் நிலை

மந்திய அமைச்சர் கணிப்பு

குற்றாலம், ஏப். 17—

"அரசாங்க அதிகாரிகளுக்கு வரவேற்பு இதழ்கள் அளிக்கப்படும் வழக்கம் அறவே நிறுத்தப்பட வேண்டும். வரவேற்பு இதழைப் பெறுகிறவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அது, மனித இயல்பில் காணப்படும் குறைதான்; இந்த வழக்கத்தை நிறுத்த நான் முயன்று வருவதோடு, இந்த உணர்ச்சி மற்றவர்களிடத்திலும் பரவச் செய்வேன்"

என்று, திருவாலங்காட்டில் நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தி வியாபாரக் கூட்டுறவுச் சங்கத் துவக்க விழாவில் அளிக்கப்பட்ட வரவேற்பு இதழ் பற்றிக் குறிப்பிடுகையில், மத்திய அரசாங்க சமுதாய நலத் திட்ட அமைச்சர் எஸ். கே. டே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

விலை உயர்வினால் கிடைத்த இலாபம்!

புள்ளிவிவரம் சேகரிக்க புதியதோர் முயற்சி

சென்னை, ஏப். 17—

சென்ற ஆண்டு ஜுன், ஜுலை மாதங்களில் விலைவாசிகள் அதிகரித்ததின் விளைவாக உணவுப் பொருள் உற்பத்தியாளருக்குக் கிடைத்த இலாபம் எவ்வளவு என்பதைப்பற்றிப் புள்ளிவிவரங்கள் தயாரிக்குமாறு சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்களாம்!

கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் நெல்—சோளம்—கம்பு பயிரிட்ட 20 விவசாயிகளையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிரிட்ட 20 விவசாயிகளையும் அதிகாரிகள் விசாரிப்பர்; இந்த விசாரணை மூன்று மாத காலத்தில் முடிவுறும்.

அடுத்த மாதத்தில் ஆரம்பமாகி விடுமாம்!

புதுடில்லி, ஏப். 17—

'நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் வேலை அடுத்த மாதம் ஆரம்பமாகும்' என்று, மத்திய மந்திரி கே. சி. ரெட்டி கூறியிருக்கிறார்.

ஆனால், இரசாயன உர உற்பத்தித் திட்டத்திற்குப் போதிய அளவு பழுப்பு நிலக்கரி உடனடியாகக் கிடைக்காதென்றும், இதற்கு மேலும் இரண்டாண்டுகள் ஆகுமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'நியூ ஏஜ்' நிருபருக்குத் தடை!

ஜோகன்ஸ்பர்க், ஏப். 17—

தென்னாப்பிரிக்காவிலோ, தென்மேற்கு ஆப்பிரிக்காவிலோ செய்திகளைச் சேகரிப்பதற்கு 'நியூ ஏஜ்' என்ற கேப் டவுன் வார இதழின் நிருபர் செல்லக் கூடாதென, கம்யூனிச எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் தென்னாப்பிரிக்க நீதி மந்திரி தடைஉத்தரவு பிறப்பித்துள்ளாராம்!

1,500 மைல் தூரத்திலுள்ள மத்திய ஆட்சியிடமிருந்து சுயஆட்சி உரிமை

கிழக்குப் பாகிஸ்தான் நகல் தயாரிக்கிறது

பாகிஸ்தான் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும் முயற்சி

டாக்கா, ஏப். 17—

"மேற்குப் பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தான் 1,500 மைல் தூரத்தில் இருக்கிறது; ஆகவே, அதற்குச் சுயநிர்ணய உரிமை அளிப்பது அவசியமாகும்.

"சில அதிகாரங்களை மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுவதால், மத்திய சர்க்காரின் கட்டுக்கோப்பு சீர்குலைந்துவிடாது"

என்று, பாகிஸ்தான் அரசியல் சட்டத்தைத் திருத்தக்கோரும் அவாமி லீக் உறுப்பினரொருவர் கூறியுள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தான் சட்டசபையில் அம்மாகாணத்திற்கு சுயநிர்ணய உரிமைகோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இதையொட்டி, சட்டசபையிலுள்ள அவாமி லீக் உறுப்பினர்கள், மாகாண சுயாட்சி பெறுவதற்கு ஏற்றமுறையில் பாகிஸ்தான் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக்கொண்டு வரும் நோக்கத்துடன் ஒருநகலைத் தயாரித்துள்ளனர்.

மத்திய சர்க்காரின் அதிகாரங்களிலிருந்து மாகாணத்திடம் ஒப்படைக்கவேண்டிய அதிகாரப் பிரிவுகளின் பட்டியல் ஒன்றை அந்நகலில் அவர்கள் சேர்த்துள்ளனர்.

கிழக்குப் பாகிஸ்தானின் நாணயச் செலாவணி, வெளிவிவகாரக் கொள்கை, இராணுவம் ஆகியவைகள் மட்டும் மத்திய சர்க்கார் வசம் இருக்கவேண்டுமென்றும், வெளிநாட்டு வர்த்தகத்தை மத்திய சர்க்காரின் வெளிவிவகாரக் கொள்கையுடன் சேர்க்கக்கூடாதென்றும் அந்நகலில் குறிப்பிட்டுள்ளனர்.

பாங்கி நிர்வாகம், இன்ஷ்யூரன்ஸ் ஆகியவை மாகாண சர்க்காரிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சுதந்திர ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சி

மனித உரிமைகளை மதிக்காத தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு எதிராக நடவடிக்கை?

பத்தாண்டுகள் முயற்சி பயனளிக்கத் திட்டம்

நியாயத்தை எடுத்துக்கூறி நல்வழிப்படுத்துவதற்கு நடைபெற்ற முயற்சியும், பத்து ஆண்டுக்காலமாக ஐ. நா.-வில் நடைபெற்ற விவாதங்களும் பயனற்றுப் போய்விட்டதால், பிற இனத்தவருக்கும் நிறத்தவருக்கும் மனித உரிமைகள் இல்லாதவாறு செய்துவரும் தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு எதிராகப் பகிஷ்கார நடவடிக்கைகளை எட்டு சுதந்திர ஆப்பிரிக்க நாடுகள் மேற்கொள்ளக் கூடுமெனத் தெரியவருகிறது.

இந்த எட்டு நாடுகளின் மாநாட்டை கனா நாட்டுப் பிரதமர் நக்ருமா கூட்டியுள்ளாராம்.

தென்னாப்பிரிக்க விமானப் போக்குவரத்துக்களையும், ஆட்டுக்குட்டித் தோல் சட்டைகளையும், மற்றப் பொருள்களையும் பகிஷ்கரிக்கும் இயக்கம் ஆப்பிரிக்கா முழுமையிலும் நடைபெறுமாம்.

விந்தியாசங்கள் இருப்பினும் இடையூறு செய்யும் நோக்கம்கிடையாதாம்

சனநாயக ஆட்சியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு விரோதமான எதையும் கேரளத்தில் காங்கிரஸ் செய்யாதாம்! அங்கு எதிர்க்கட்சியாகக் காங்கிரஸ் இயங்குமாம்!

எர்ணாகுளத்தில் இவ்வாறு கூறியுள்ள தேபர், கம்யூனிஸ்டுகளுக்கும் தங்களுக்குமிடையே அடிப்படையான வித்தியாசங்கள் உண்டெனினும், அரசியல் சட்டப்படி ஆட்சி நடப்பதற்கு இடைஞ்சல்செய்யும் நோக்கம்தங்களுக்குக் கிடையாதென்று குறிப்பிட்டதாகவும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

என்ன காரணமோ?

புதுடில்லி, ஏப். 17—

துணி உற்பத்தி மீது, சதுரகெசத்திற்கு அரையணா வீதம் கலால் வரி கழிவு அளிப்பதை, இனி மேலும் தொடர்ந்து நீடிப்பதென இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்களாம்!

மக்கள் தந்த கடனுக்கு மறுப்பு

இனி கடன்கோருவதில்லை என உறுதி

மாஸ்கோ, ஏப். 12—

தனது மக்களிடமிருந்து கடனாக வாங்கப்பட்ட 260 பில்லியன் ரூபிள் தொகையில், இவ்வாண்டு திருப்பிச் செலுத்தப்படவேண்டிய தவணைத் தொகையையோ அல்லது மொத்தத் தொகையின் வட்டிப் பணத்தையோ, இப்பொழுது திருப்பிக் கொடுக்கப் போவதில்லை என்று சோவியத் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

மேலும், 20 அல்லது 25 ஆண்டுக் காலம்வரையில் அரசாங்கத்திற்குத் தந்துள்ள கடனைத் திரும்பப் பெறக்கூடும் என மக்கள் எதிர்பார்க்கக்கூடாது என்றும் கம்யூனிஸ்டுக் கட்சி பொதுச்செயலாளர் குருஷேவ் தெரிவித்துள்ளார்.

இக்கடன் தொகை, கடந்த 20 ஆண்டுக்காலமாக மக்களிடமிருந்து அரசாங்கத்தால் பெறப்பட்டவை ஆகும்.

1958-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மக்களிடமிருந்து கடன் பெறும் முறையை சோவியத் அரசாங்கம் கைவிட்டுவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு சோவியத் குடிமகனும், தனது ஓராண்டு வருமானத்தில் மூன்று அல்லது நான்கு வாரங்களின் வருமானத்தைக் கொண்டு, வழங்கிய அரசாங்கக் கடன் பத்திரங்களின் மொத்தக் கடன் தொகையாகும்.

மேற்படி கடன் தொகையைத் திருப்பித் தருவதற்கு, ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 30 பில்லியன் ரூபிள்வரை தேவைப்படுகிறது. இந்த ஆண்டில் திருப்பித் தரவேண்டிய முதலும் வட்டியும் சேர்ந்து 16 பில்லியன் ரூபிளும் அடுத்த ஆண்டு 18 மில்லியன் ரூபிளும் ஆகின்றன.

வண்ணைத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்புக் கூட்டம்

பொதுச்செயலாளர், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்

13-4-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை - இராயபுரம் சிங்கார வேலர் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில், வடசென்னைத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்புக் கூட்டம், பனைமரத் தொட்டி-அம்மன் கோவில் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் கே. குப்புராசு தலைமை வகித்தார். அவர் தனது தலைமையுரையில் நடைபெற்றத் தேர்தலில் கழகப் பணியை விளக்கினார்.

பின்னர், தோழர் காஞ்சி - கலியாணசுந்தரம் அவர்கள் தேர்தலில் போலீஸ்அதிகாரிகள் நடந்து கொண்ட முறையை வன்மையாகக் கண்டித்து - அவர்கள் பொதுமக்களின் சேவகர்கள் என்பதை நினைவுறுத்தினார்.

அடுத்துத் தோழர் என். சீவரத்தினம் தனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும் - தேர்தல் பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும் நன்றி தெரிவித்து, தொகுதியில் உள்ள நிலையை விரிவாக விளக்கிப் பேசினார்.

இறுதியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இன்றையக் காங்கிரஸ் கொள்கைக்காக வளர்ந்த காங்கிரஸ் அல்லவென்பதையும், பண முதலாளிகளின் காங்கிரஸ் என்பதையும் தெளிவாக விளக்கிப் பேசிய பின், சிங்காரவேலர் 25 - ஆண்டுகளுக்கு முன் எழுதிய 'சுயராஜ்யம் யாருக்கு?' என்ற நூலை, சிங்காரவேலர் பகுத்தறிவுப் படிப்பகத்தார் வெளியிட்டிருப்பதை ஆதரிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில், தலைவர்களுக்கு மேற்படி படிப்பகத்தின் சார்பில் கைத்தறித் துணிகள் அணிவிக்கப் பட்டதோடு, வண்ணைத் தேர்தல் வழக்கு நிதிக்கு நன்கொடைகளும் தோழர் என். சீவரத்தினம் அவர்களிடம் அளிக்கப்பட்டன.

ஓகோ, அப்படியா?

புதுடில்லி, எப். 17—

சுற்றுப்பயணத்தின்போது மத்திய சர்க்கார் உதவி மந்திரிகள் தங்களுடன் உறவினர் ஒருவரையும் சர்க்கார் செலவில் அழைத்துச் செல்லலாமாம்! மத்திய மந்திரிகளுக்கு முன்னரேயே இந்தச் சலுகை இருந்துவருகிறதாம்!

அன்பளிப்புகள்

18—2—57-ல், தெ. ஆ. மாவட்டம் விருத்தாசலம்—நிராமணி கிராம தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1—4—0 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சென்னை—மயிலை தி. மு. க. உறுப்பினர் தோழர் எம். சீதாபதியின் துணைவியார் தோழியர் இலட்சுமியம்மையார் 22-3-57-ல், ஓர் பெண் மகவுக்குத் தாயானார். 7-4-57-ல், தோழர் மா. அமலன் தலைமையில், குழந்தைக்கு 'கலைச் செல்வி' எனப் பெயரிடப்பட்டு, உடன் தேநீர் விருந்தளித்தும், கோகுலம் பேபி எ. எம். புவனேசுவரியின் நடனமும், தோழர் முனுசாமி குழுவினரால் இன்னிசை விருந்தும் நடைபெற்றது. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

29—3—57 காலை 9 மணிக்கு குருக்கத்தி தோழர் எஸ். விசுவநாதன் இல்லில், கீழ்வேளூர் தோழர் ஆர். வி. இராசன் தலைமையில் தோழர் எஸ். கந்தசாமி —தோழியர் கிருட்டிணவேணி வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. தோழர்கள் வை. பாவாடை, அரங்கநாதன் ஆகியோர் வாழ்த்துரைக்குப்பின், மணமக்களால், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

1—4—57ல், நாஞ்சில்—ஆரல்வாய்மொழி தோழர் இராமசாமி —தோழியர் இசக்கியம்மையார் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் டி. எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

7-4-57ல் சென்னைத் தோழர் த. சைமன் - தோழியர் நாகம்மை வாழ்க்கை ஒப்பந்தவிழா, தோழர் அ. பொ. அரசு தலைமையில், தோழர் க. அன்பழகன் முன்னிலையில் நடைபெற்றபோது, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—4—57ல், ஒரிசாவிலுள்ள டால்கேரி நிலக்கரி வயல் தோழர் இராமன்—தோழியர் தனபாக்கியம் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

12—4—57 இரவு 8 மணியளவில் நெல்லை—கடையநல்லூர் தி. மு. கழக ஆதரவில், தோழர் சி. நடராசன் தலைமையில், தோழர் மு. இராமசாமி—தோழியர் பிச்சம்மாள் மறுமண ஒப்பந்த விழா, மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் பி. ஆறுமுகம், கோஸ்முகம்மது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

'டாக்டர்' பட்டம் பெற்ற சேதுபிள்ளைக்குப் பாராட்டு

5-4-57 மாலை 5-30 மணிக்கு, சென்னை மெமோரியல் மண்டபத்தில், சென்னைத் தமிழாசிரியர் கழகச் சார்பில், அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் 'டாக்டர்' பட்டம் வழங்கப் பெற்ற திரு. ஆர். பி. சேது (பிள்ளை) அவர்களைப் பாராட்டி, பேராசிரியர் மயிலை - சிவமுத்து அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

சென்னை தியாகராய கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் வரவேற்புரைக்குப் பின், கிருத்துவக் கல்லூரி தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரனார், பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம், பெரும்புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர், பண்டிதை எஸ். கிருட்டிணவேணி அம்மையார் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

புலவர் வில்வபதி அவர்களால் பாராட்டிதழ் வாசித்தளிக்கப் பட்டு, மிகப்பெரிய மாலையொன்று அணிவிக்கப்பட்டது.

திரு. ஆர். பி. சேது(பிள்ளை) அவர்கள் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

விழாவிற்கு வருகை தந்த தாய்மார்கள்—புலவர் பெருமக்கள்—பொது மக்கள் அனைவருக்கும் மலர்—பன்னீர்—சந்தனம் முதலியவை வழங்கப்பட்டது. செயலாளர் வி. பலராமன் விழாவிற்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார். விழாவின் துவக்கத்திலும்—முடிவிலும் சிறுமிகள் ராஜி—கிரி சகோதரிகள் நடனமும், குழந்தைகளுக்குப் பரிசுகளும் வழங்கப் பட்டு விழா இனிது முடிவுற்றது.

திரு. ஆர். எம். அழகப்ப செட்டியார் மறைவுக் குறித்து ஒரு அனுதாபத் தீர்மானம் தலைவரால் கொண்டுவரப்பட்டு, அனைவரும் ஒலியின்றி நின்று நிறைவேற்றப் பட்டது.

சமுதாயத்தில் கழகம் ஆற்றிய பணி

திருவள்ளூரில் அண்ணா விளக்கம்

தி. மு. க. ஆற்றல் கண்டு வழக்கறிஞர் வியப்பு

"அண்ணா அவர்கள் வருகிறார் என்று அறிந்ததும், இவ்வளவு பெருங்கூட்டம் வரும் என்று நான் எதிர்ப் பார்க்கவில்லை; அண்ணாமீது மக்களுக்குள்ள அன்போ, அல்லது மக்களை இழுக்கும் சக்தி தி. மு. கழகத்திடம் தான் இருக்கிறதோ தெரியவில்லை? நாஸ்திக சக்தி வாய்ந்த ஓர் இயக்கத்திடம் மக்கள் இப்பெரும் அளவு அபிமானம் வைத்திருப்பது வியப்பிற்குரியதாகும்.

"எங்கள் கலைக் கழகத்தின் சார்பில் கூட்டப் பிரசுரங்கள் வெளியிட்ட உடனே தி. மு. கழக இளைஞர்கள் - ஆதரவாளர்கள் அண்ணா அவர்களிடத்தே வைத்த பெருமதிப்பால், இரவு முழுதும் தோரணங்களும்-தட்டிகளும் கட்டினார்கள். இந்த இளைஞர்களிடத்தில்தான் அன்பு என்ற ஆண்டவன் இருக்கிறான்,"

என்று, 13-4-57 மாலை 7 மணிக்கு திருவள்ளூர் கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்த வழக்கறிஞர் தோழர் எம். வெங்கடாரமன் (ஐயர்) அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

13—4—57 மாலை 7 மணிக்கு அண்ணா அவர்கள் திருவள்ளூர்-கலைக் கழகத்தின் சார்பில் சொற்பொழிவாற்றுவார் என்பதையறிந்த வெளியூர் மக்கள், ஏராளமாக அன்று காலையிலிருந்தே கூட ஆரம்பித்தார்கள். ஊரெங்கும் தோரணங்கள்—வரவேற்புத் தட்டிகள் கட்டி விழாக்கோலமாக்கியிருந்தனர், தி. மு. கழகத் தோழர்களும்—ஆதரவாளர்களும்!

மாலை 6 மணிக்கு திருவள்ளூர் வந்து சேர்ந்த அண்ணா அவர்கள் கலைக் கழகப் பெரியோர்களிடத்தில் சிறிது நேரம் உரையாடிவிட்டு, 7 மணியளவில் கூட்ட மேடைக்கு வந்ததும், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வரவேற்றனர்.

தலைவர் முன்னுரைக்குப்பின், 'நமது சமுதாயத்தில் தி. மு. கழகத்தின் பணி,' என்ற தலைப்பில், கழகம் சமுதாயத்தில் ஆற்றியுள்ள பணியையும், ஆற்ற வேண்டிய பணியையும், அழகான உவமைகளால் ஆழ்ந்த கருத்துக்களுடன் விளக்கியதோடு, 'தி.மு. கழகம் நாத்திக இயக்கமா? ஆத்திக இயக்கமா? — என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி அனைவருக்கும் நன்றிகூறி தனது சொற்பொழிவை முடித்தார்.

அண்ணா அவர்களுக்கு வெளியூர்—உள்ளூர் தி.மு. கழகக் கிளைகள், மன்றங்கள், தையல் தொழிலாளர்கள், தனிப்பட்டோர் ஆகியவர்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

'நம் நாடு' வளர்ச்சிக்கு திருவள்ளுவர் தி. மு. கழக ஆதரவாளர்களால் ரூ. 2 அண்ணா அவர்களிடம் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

நெல்லை - கடையநல்லூர் கே. வி. கே. சாமி நினைவு மன்றம்

31—3—57 இரவு 9 மணிக்கு, கே. வி. கே. சாமி நினைவு மன்றத்தின் அமைப்புக் கூட்டம் தோழர் ஐ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் பேசிய பின், செயலாளராக தோழர் ஆ. சிந்தாமணியும், துணைச்செயலாளராக தோழர் வி. பிச்சுமணியும், பொருளாளராக தோழர் மா. சுடலையாண்டியும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் கி. சங்கரன், எஸ். முப்புடாதி, என். எஸ். முருகையா, இரா. செயலழகன், டி. ஐயம்பெருமாள், டி. சுந்தரம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றம்

31—3—57 காலை 9 மணியளவில், தோழர் சி. எஸ். கணேசன் தலைமையில் கூடிய மக்கள் மன்ற பொதுக் குழுவில், 1956—57-ம் ஆண்டு வரவு - செலவு கணக்குகளை ஏற்றுக்கொண்டு, 1957 — 58-ம் ஆண்டிற்கு தோழர் சி. எஸ். கணேசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் நிருவாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பொள்ளாச்சி வேலாயுத மன்றம்

31—3—57 காலை 11 மணிக்கு பொள்ளாச்சி-பார்க் ரோடு எண். 11 கட்டிடத்தில், வேலாயுத மன்றத்தின் செயற்குழு தேர்தல் தோழர் வி. எஸ். கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் க. முத்தழகன் செயலாளராகவும், அ. முத்து துணைச்செயலாளராகவும், இரா. கந்தசாமி பொருளாளராகவும், இரா. சுப்பிரமணியம் விளம்பர உறுப்பினராகவும் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக 11 பேர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சென்னை—இராயபுரம் முத்தமிழ் மன்றம்

5—4—57 இரவு 9 மணிக்கு, மேற்படி மன்றத்தின் நிர்வாகக் குழு தோழர் எஸ். மாரிமுத்து தலைமையில் நடைபெற்றபோது, மன்றத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும், நிர்வாகத் தேர்தல் நடத்துவது பற்றியும் ஆராயப்பட்டது.

சென்னை—காசிமாநகர் உதய சூரியன் இளைஞர் மன்றம்

7—4—57 காலை 9 மணிக்கு தோழர் எம். ஆர். சி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற கூட்டத்தில் தோழர்கள் கே. சந்திரன் செயலாளராகவும், பாவாடைசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, திறப்பு விழா பற்றியும் தீர்மானிக்கப் பட்டது.

சென்னை சி. ஐ. டி. நகர் தியாகராயர் மன்றம்

6-4-57 இரவு 9-30 மணிக்கு மேற்படி மன்றத்தின் பொதுக் குழு தோழர் அருச்சுனன் இல்லத்தில், தோழர் அன்பானந்தம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் அன்பானந்தம் செயலாளராகவும், பாண்டியன் துணைச் செயலாளராகவும், சுப்ரமணியம் பொருளாளராகவும், அரிகிருஷ்ணன் தணிக்கையாளராகவும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சென்னை — அயன்புரம் இளங்கோ மன்றம்

7—4—57-ல் நிறுவப்பட்ட இம் மன்றத்திற்கு தோழர் சோ. ந. முருகேசன் அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

சென்னை — இராயபுரம் நெடுஞ்செழியன் பகுத்தறி மன்றம்

7—4—57-ல் மேற்படி மன்றத்தின் பொதுக் குழு, தோழர் அ. அன்புரோசு தலைமையில் நடைபெற்றபோது, மன்றத்தின் சட்ட திட்டங்களை தி. மு. கழகத்திற்கு உட்பட்டு ஏற்படுத்தப்பட்டது.

சென்னை—சிங்காரத்தோட்டம் தெலுங்கு செட்டியார் மகா சன சங்கம்

29—3—57ல், நடைபெற்ற 24 மனை தெலுங்கு செட்டியார் மகாசன சங்க நிருவாகக் கூட்டத்தில், தோழர்கள் எஸ். மாரிமுத்து தலைவராகவும், கி. மா. பக்தவத்சலம் துணைத் தலைவராகவும், ஏ. கே. கருப்பையா செயலாளராகவும், பா. சண்முகம் துணைச்செயலாளராகவும், ஏ. வி. சுந்தரராசன் பொருளாளராகவும் மற்றும் பதின்மர் நிருவாக உறுப்பினர்களாவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

கோவை—இலக்குமி பஞ்சாலை தி. மு. கழக தொழிற் சங்கம்

மேற்படி சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் நல்லதம்பி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் அர. சுந்தரம் செயலாளராகவும், நாராயணசாமி பொருளாளராகவும், ராமதாஸ், பெ.பாப்புசாமி, ஆறுமுகம், நாராயணசாமி, துளசிதாஸ், நாச்சிமுத்து, முத்துசாமி, ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, கழகத் தோழர்களை சட்ட மன்றத்திற்கு தேர்ந்தெடுத்த மக்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேறியது-

சென்னை—தூளை பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகம்

2—4—57 காலை, தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டுமுகத்தான், மேற்படி மன்ற சார்பில், இனிப்பு வழங்கியும், 11 மணிக்கு ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பட்டது. மாலை 7½ மணிக்கு, தோழர் மு. கன்னியப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், ஜார்ஜ், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர். தலைவர்களுக்கு பல நிறுவனங்களின் சார்பிலும், தனிப்பட்டோர் சார்பிலும் மலர் மாலைகளும்—கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

திருப்பூர்பனியன்பேக்டரி தொழிலாளர் கழகம்

7-4-57 காலை 10 மணிக்கு மேற்படி கழகத்தின் அமைப்புக் குழு, திருப்பூர் அறிவுக் கலைக் கூடத்தில் நடைபெற்றபோது, தோழர்கள் கே. எஸ். மணியம் செயலாளராகவும், துரைராஜ் துணைச் செயலாளராகவும், ஆறுமுகம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, தி. மு. கழகச் சார்பில் வெற்றிபெற்ற அனைவரையும் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனைவருக்கும் இனிப்பும் வழங்கப்பட்டது.

சென்னை - நுங்கம்பாக்கம் சிந்தனையாளர் கழகம்

7—4—57ல் மேற்படி கழகத்தின் உறுப்பினர்கூட்டம் தோழர் திருச்சி - லாரென்ஸ் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கோபாலன் தலைவராகவும், நடேசன் துணைத் தலைவராகவும், ரேவிஸ் சாம்சன் செயலாளராகவும், திருச்சி-லாரென்ஸ் துணைச் செயலாளராகவும், அமல்லார் தாஸ் பொருளாளராகவும், மற்றும் 3 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

‘சித்தமருத்துவம்-தமிழனின்தொன்மைசொத்து’

‘மக்கள் பலர் இவ்வுண்மை அறியாதுள்ளனர்’

‘இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்--- அதற்கான பள்ளிகள் பல நிறுவவேண்டும்’

‘வளப்படுத்தத் தனிக்குழுவினை அரசாங்கம் நிறுவவேண்டும்’

ஒன்றுபட்டு உழைக்கும்படி சித்த மருத்துவர்களுக்குக் கோரிக்கை

சென்னை, பிப். 18—

“தமிழ் நாட்டின் தொன்மையான மருந்துவ முறையாக இருப்பது சித்தர் மருத்துவமாகும். இத்தொடர்பில் சிறப்பான உண்மைகள் பல திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் பகுதிகளை உள்ளடக்கிக் கொண்டுள்ள மாநில ஆட்சியைப் பெற்றுள்ளோம். அத்துடன் தமிழும் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே, நமது சொந்த மருத்துவ முறையை வளப்படுத்துவதில் நாம் கருத்துச் செலுத்தவேண்டும்.”

—ஏ. கசபதி, எம். எல். சி.,

“உள்நாட்டு மருத்துவக் கல்லூரியில், சித்த மருத்துவம் பற்றி ஆராயவும், நன்கு கற்கவும், தேவையான ஏற்பாடுகளை ஆட்சியினர் செய்து தரவேண்டும்.”

—டாக்டர் டபிள்யூ வி. பெருமாள்
(முன்னாள் பொது சுகாதார துணை அலுவலர்)

“சித்த மருத்துவம் தனிச் சிறப்பு வாய்ந்தது; அம்மருந்துவ முறையை இளைஞர்களுக்குக் கற்பிக்கத் தமிழ் நாடு முழுதும் பள்ளிகளைத் துவங்க வேண்டும்.”

—டாக்டர் வி. சாது நாராயணசாமி

“சித்த மருத்துவ முறை மிக மிக உயர்ந்தது. பெரும்பான்மையான மக்கள் இம்முறையைத் தெரிந்திருக்கவில்லை. இம்முறையை ஆதரித்து விரிவாக இந்த காலத்தில் பிரசாரம் செய்யப்படவில்லை.

“விலை மலிவையும், அரசாங்கக் குறைந்த செலவையும் கருதி, உள்நாட்டு மருத்துவ முறை ஆக்கத்திற்கு இனி அரசாங்கம் ஆதரவு காட்டும்.”

—எம். ஏ. மாணிக்கவேலு, அமைச்சர்

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை திருவல்லிக்கேணியில், இராச இராசேசுவரி சித்த வைத்தியசாலை சார்பில் ‘சித்தர் விழா’ கொண்டாடப்பெற்றது. அவ்விழாவில் கலந்துகொண்ட நிலவரி அமைச்சரான கனம் எம். ஏ. மாணிக்கவேலர் அவர்கள், மேற்கண்டவாறு சித்த மருத்துவ முறையின் தனிச்சிறப்பு குறித்து விளக்கிக் கூறியதுடன், அதைப் பரப்புவதற்கான உதவியை அரசாங்கச் சார்பில் செய்யத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தார்.

அவ்விழா, முன்னாள் நீதிபதி ஏ. கசபதி எம். எல். சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மத்திய சித்த மருதுவக் குழுவின் செயலாளரான ஏ. சண்முகவேலு அவர்கள் அமைச்சருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்து, ‘சித்த மருத்துவ முறையை வளப்படுத்துவதற்காகத் தனித்த ஒரு குழுவையும், அதற்கான அலுவலரையும் அரசாங்கம் நிறுவவேண்டும்’ எனக் கோரினர்.

‘சித்த மருத்துவர் அனைவரும் ஒன்றுபட்டு, மேற்படி மருத்துவ முறையைப் பொது மக்களிடை பிரச்சாரம் செய்யவேண்டும்,’ என்று டாக்டர் சாது எச். தேவதாஸ் வேண்டிக்கொண்டார்.

சித்த மருத்துவ மத்தியக் குழு மாலையில்கூடி, சித்த மருத்துவ மேம்பாட்டிற்காக ஆவன செய்யும்படி முதலமைச்சரைச் சந்தித்து வற்புறுத்துவது எனத் தீர்மானித்து, அதற்கான ஒரு குழுவையும் உருவாக்கியது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை—மூலக்கடை:
19—4—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: மு. கிருட்டிணமூர்த்தி
பேசுவோர்;
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
என். வி. என். சோமு
மா. பொ. வேதாசலம்
மதிவாணன்

★

தம்மம்பட்டி:
வண்டிப்பேட்டை மைதானம்
19—4—57 மாலை 7 மணிக்கு
தலைவர்:
எஸ். கே. அப்துல்சுக்கூர்
பேசுவோர்:
அண்ணு
எம். பி. சுப்பிரமணியம்
டி. இருசப்பன்
அ. பொன்னம்பலனர்

★

கள்ளக்குறிச்சி:
வள்ளுவர் திடலில்
20—4—57 மாலை 7-மணிக்கு
தலைவர்: வி. டி. இளையாப்பிள்ளை
பேசுவோர்:
எம். பி. சுப்பிரமணியம்
சி. நடராசன்
எம். ஆனந்தன்
மு. பாண்டியன்

★

முதுகுளத்தூர்:
20—4—57
தலைவர்: செந்தூர் பாண்டியன்
பேசுவோர்:
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
எம். எஸ். இராமசாமி
ஆர். எம். அலியார்
திராவிடதாசன்

சென்னை முத்தமிழ் மன்றம்

19-4-57 மாலை 6 மணிக்கு, சென்னை-1 முத்தமிழ் மன்றம் எண் 17 சாலை விநாயகர் கோயில் தெரு பணிமனையில், தோழர் ஏ. மு. சீனுவாசன் தலைமையில் ‘கடமை’ எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை 5-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம்

19-4-57 மாலை 7 மணிக்கு மேற்படி வட்ட பொது உறுப்பினர் கூட்டம், கிளைக் கழக இல்லில் நடைபெறும்; அதுபோது கழக வரவு-செலவு கணக்குகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கோதாவரி படகு விபத்து எதிரொலி

விசாரணைக் குழு நியமனம்

ஐதராபாத், எப். 17—

சமீபத்தில் பத்ராசலத்திற்கு அருகில் கோதாவரி நதியில் ஏற்பட்ட படகு விபத்து பற்றி விசாரணை நடத்த ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிற்கு, தேசீயக் கட்சித் தலைவர் இராமகிருட்டிண இராசு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் 202 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்தினால் அனாதைகளாகிவிட்ட பெண்கள், குழந்தைகளுக்கு நிவாரணம் அளிக்கப்படும்.

சட்டசபையில் இதுபற்றி தகவல் அறிவித்த முதலமைச்சர், எந்த அதிகாரியையோ, படகுக்காரரையோ பாதுகாப்பது சர்க்கார் நோக்கமல்ல என்றும், முன்னமேயே ஒரு போலீஸ் அதிகாரியும், 5 படகுக்காரர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

லலித கலா மன்றம்—சென்னை-1
19—4—57 வெள்ளி மாலை 6-30 மணிக்கு
இராசா அண்ணாமலை மன்றத்தில்
‘சேவாஸ் ஸ்டேஜ்’ (எஸ். வி. சகஸ்ரநாமம் குழு) நடிக்கும்
‘பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்’
நாடகம் (கதை—வசனம்: திரு. பி. எஸ். இராமய்யா)
இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில் நடைபெறும்
★
கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1.
குறிப்பு: டிக்கெட்டுகள் 19—4—57 காலை 8-30 மணி முதல் அண்ணாமலை மன்றத்தில் கிடைக்கும்.

39 பேர் கொண்ட மத்திய அமைச்சரவையில் தமிழகத்திற்குக் கிடைத்த பங்கு?

புதுடில்லி, எப். 17—

மத்திய அமைச்சரவையில் வியப்புக்குரிய மாற்றங்கள் ஒரு சிலவற்றைத்தான் குறிப்பிட முடியும்.

13 மந்திரிகள், 14 துணை மந்திரிகள், 12 உதவி மந்திரிகள் அடங்கிய அந்த அமைச்சரவையில், அரியலூர் இரயில் விபத்தை யொட்டி இராஜினமா செய்த லால் பகதூர் சாஸ்திரி போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து இலாகாவை ஏற்றுத் திரும்பியுள்ளார்.

அமைச்சர் பதவிக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பவர் எஸ். கே. படீல் ஒருவர் தான்.

முன்னைய மந்திரி சபையிலிருந்த பதினன்கு பேர்களில் இராஜ்குமாரி அமிர்தகௌரி, சி. சி. பிஸ்வாஸ், கந்துபாய் தேசாய் ஆகியோரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் புதிய மந்திரி சபையில் இடம் பெற்றுள்ளனர்.

இரு பெண்மணிகள் உதவி மந்திரிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

முன்னைய அமைச்சரவையில் தமிழ் நாட்டை ஒட்டி டி. டி. கிருஷ்ணமாச்சாரியுடன் ஓ. வி. அளகேசன், திருமதி மரகதம் ஆகியோர் இருந்தனர். பின்னைய இருவரும் தேர்தலில் தோல்வியுற்றதால் அவர்களுக்குப் பதவி கிடைக்கவில்லை; ஆனல், அவர்களுக்குப் பதிலாகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த எவரும் புதிய அமைச்சரவையில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலாகா விவரங்களுடன் மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளவர்களின் விவரம் வருமாறு:—

1. பண்டித நேரு (பிரதம மந்திரி)—வெளிவிவகாரம், அணுசக்தி.
2. மௌலானா அபுல்கலாம் ஆசாத்—கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி.
3. கோவிந்த வல்லப பந்த்—உள்நாட்டு விவகாரம்.
4. மொரார்ஜி தேசாய்—வர்த்தகம், கைத்தொழில்.
5. ஜெகஜீவன்ராம்—இரயில்வே.
6. குல்சாரிலால் நந்தா—தொழிலாளர், வேலை வாய்ப்புத் திட்டம்.
7. டி. டி. கிருஷ்ணமாச்சாரி—நிதி.
8. லால்பகதூர் சாஸ்திரி—போக்குவரத்து, தபால்-தந்தி.
9. சர்தார் சுவரண்சிங்—உருக்கு, சுரங்கம், எரிபொருள்.
10. கே. சி. ரெட்டி—மராமத்து, குடியிருப்பு வசதி, விநியோகம்.
11. அஜீத் பிரசாத் ஜெயின்—உணவு, விவசாயம்.
12. கிருஷ்ணமேனன் — பாதுகாப்பு.
13. எஸ். கே. பட்டீல்—நீர்ப்பாசனம், மின்சாரம்.

இவர்கள் அனைவருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் வாக்குரிமை உண்டு.

உதவி மந்திரிகள்:

உதவி மந்திரிகளாக 12 பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்:—

1. சர்தார் சுர்ஜித் சிங் மஜீதியா
2. அமீத் அலி
3. அனில்குமார் சந்தா
4. எம். வி. கிருஷ்ணப்பா
5. ஜெய்சுக்லால் ஹாதி
6. சதீஷ் சந்திரா
7. சியாம சந்திர மிச்ரா
8. பாலி ராம் பகத்
9. டாக்டர் மனமோகன் தாஸ்
10. ஷா நவாஸ்கான்
11. இலட்சுமி மேனன்
12. வயலட் ஆல்வா.

துணை மந்திரிகள்:

14 பேர் துணை(அரசாங்க)மந்திரிகளாக (அமைச்சரவையில் வாக்குரிமை இல்லாதவர்களாக) நியமிக்கப்பட்டிருக்கின்றனர்:—

1. சத்தியநாராயண சின்ஹ
2. டாக்டர் பி. வி. கேஸ்கர்
3. டி. பி. கர்மார்க்கர்
4. டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக்
5. கே. டி. மாளவியா
6. மேகர்சந்த் கன்ன
7. நித்தியானந்த கனுங்கோ
8. ராஜ்பகதூர்
9. பி. என். தத்தார்
10. எம். எம். ஷா
11. எஸ். கே. டே
12. ஏ. கே. சென்
13. டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி
14. உமாயூன் கபீர்.

காமன்வெல்த் மாநாடு

பண்டிதரும் கலந்துகொள்வார்

புதுடில்லி, எப். 17—

பிரிட்டிஷ் பிரதமர், மற்ற காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்களைக் கலந்துகொண்டு காமன்வெல்த் மாநாட்டை ஜூன் 26-ந் தேதி இலண்டனில் நடத்துவது என்று முடிவு செய்துள்ளாராம்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் சம்மதம் தந்துள்ளாராம்.

ஆரணியில்

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப்

பாராட்டுக் கூட்டம்

20-4-57 மாலை 6 மணிக்கு ஆரணி தி. மு. கழக சார்பில் ஆரணி-கொசப்பாளையம் தர்மராசா கோயில் எதிரில், தி. மு. கழக சட்ட மன்ற—பாராளு மன்ற உறுப்பினர்களைப் பாராட்டி ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது அண்ணு அவர்களும், மற்றும் தோழர்கள் ப. உ. சண்முகம், சி. சந்தானம், மா. பா. சாரதி ச. மோ. அண்ணுமலை, இரா. தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். காஞ்சி-வே. முருகேசன் இன்னிசை வழங்குவார்.

பவானிசாகர் என். ஜி. ஓ. சங்க ஆண்டு நிறைவு விழா

20-4-57 காலை 8-30 மணிக்கு பவானிசாகர் என். ஜி. ஓ. சங்க ஆண்டுவிழா, பவானிசாகர்—சமுதாய நல மண்டபத்தில்துவங்கும்; மாலை 6 மணிவரை பல நிகழ்ச்சிகளுக்குப் பின் தோழர் நம்பியூர்-வெங்கட்ராசன், கோபி ஏ. இராமகிருஷ்ணன் (திலகம்) குழுவினர் ஆகியோரின் இன்னிசை விருந்து நடைபெறும். இரவு 8-30 மணிக்கு ‘ஏழை எழுத்தர்’ என்ற நாடகம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

18-4-57 மாலை 6 மணிக்கு சென்னை—பிராட்வே எண் 4/88 தி. மு. கழகப் பணிமனையில் தோழர் தெ. அன்பரசு தலைமையில் ‘எதிர் காலம்’ என்ற தலைப்பில் கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.